Workforce Singapore

# ஸ்கில்ஸ்ஃபியூச்சர் வேலை தேடுபவர் ஆதரவுத் திட்டத்தின் மூலம் வாழ்க்கைத்தொழில் பின்னடைவிலிருந்து மீளுதல்

வாழ்க்கைத்தொழில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதாக இருக்கட்டும், வேலை தேடுவதற்கு ஆலோசனை பெறுவதாக இருக்கட்டும் அல்லது உங்கள் அடுத்த வேலை வாய்ப்பைக் கண்டுபிடிப்பதற்கான பயிற்சிக்குப் பதிவு செய்வதாக இருக்கட்டும், நீங்கள் வலுவாக மீண்டு எழுவதற்கு உங்களுக்கு உதவ நாங்கள் இங்கு இருக்கிறோம்.



மேல்விவரங்களுக்கு **go.gov.sg/wsg-jsscheme** என்ற இணையத்தளத்திற்குச் செல்லவும்.

21 வயது மற்றும் அதற்கும் அதிகமான வயதுள்ள, வேலை தேடுவோர் **கடந்த 12 மாதங்களில் சராசரியாக மாதம் $5,000 அல்லது அதற்கும் குறைவான மொத்த சம்பளம் ஈட்டியவர்கள்**

சிங்கப்பூரில் **ஆண்டுச் சொத்து மதிப்பு $31,000 வரையிலான** வீட்டில் வசிக்கும் வேலை தேடுவோருக்கானது

ஆட்குறைப்பு, வியாபாரம் நின்றுபோவது, அல்லது உடல்நலக்குறைவு, காயம் அல்லது விபத்தால் பணிநீக்கம் செய்யப்படுதல் போன்ற **எண்ணாமல் நிகழ்கின்ற வேலையிழப்பு காரணங்களால் வேலையிழந்த** ஊழியர்களுக்கானது

விண்ணப்பதாரர்கள் மீண்டும் வேலையைப் பெற **துடிப்போடு வேலை தேடுவது, பயிற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும்**

*இது சுற்றுச்சூழலுக்குகந்த காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.*

# திட்டத்தைப் பற்றி

திடீரென வேலையிழப்பது சவால் மிகுந்ததாகும், ஆனால் அது நிரந்தரமானதல்ல, அது உங்கள் வளர்ச்சிக்கான வாய்ப்புகளையும் புதியத் தொடக்கத்தையும் வழங்கலாம்.

**ஸ்கில்ஸ்ஃபியூச்சர் வேலை தேடுபவர் ஆதரவுத் திட்டம்,** எண்ணாமல் நிகழ்கின்ற வேலையிழப்பு காரணங்களால் வேலை இழந்த, துடிப்போடு வேலைத் தேடுவோருக்கு தற்காலிகமாக 6 மாதங்களுக்கு $6,000 வரை நிதியுதவி வழங்குகிறது.

# வாழ்க்கைத்தொழில் மாற்றங்களில் உங்களின் பங்காளி

நீங்கள் இந்தப் பயணத்தைத் தொடங்கும் நிலையில், சிங்கப்பூர் ஊழியர் அணி அமைப்பு (WSG) உங்கள் வேலை சரியான முறையில் அமைய உங்களுக்குத் தேவையான ஆற்றல்களையும் வளங்களையும் வழங்கத் தயாராக உள்ளது. **உறுதியுடனும் தன்முனைப்போடும் இருங்கள், உங்களுக்கான அடுத்த வாய்ப்புக் காத்திருக்கிறது.**





*அச்சிடும் நேரத்தில் தகவல் துல்லியமாக இருந்தது.*

# யாரெல்லாம் விண்ணப்பம் செய்யலாம்?

21 அல்லது அதற்கு அதிகமான[1] வயதுடைய வேலைத்தேடுவோர், கடந்த 12 மாதங்களில் சராசரியாக மாதந்தோறும் $5,000* அல்லது அதற்குக் குறைவாக வருவாய் ஈட்டியவர்கள்

கடந்த 12 மாதங்களில் குறைந்தது 6 மாதங்களுக்காவது சிங்கப்பூரில் வேலை செய்தவர்

ஆட்குறைப்பு, வியாபாரம் நின்றுபோவது, அல்லது உடல்நலக்குறைவு, காயம் அல்லது விபத்தால் பணிநீக்கம் செய்தல் போன்ற எண்ணாமல் நிகழ்கின்ற வேலை இழப்பில் பாதிக்கப்பட்டவர்கள்

சிங்கப்பூரில் ஆண்டுச் சொத்து மதிப்பு** $31,000 வரையிலான வீட்டில் வசிப்பவர்



*[1] விண்ணப்பங்கள் சிங்கப்பூரர்களுக்கு ஏப்ரல் 2025-லிருந்தும், நிரந்தரவாசிகளுக்கு 2026ன் முதல் காலாண்டிலிருந்தும் திறக்கப்படும்.*

** மத்திய சேமநிதிச் சந்தாவிற்கு முந்தைய போனஸ்கள், படித்தொகைகள் மற்றும் மிகுதிநேர ஊதியங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது.*

*** உங்கள் வீட்டின் ஆண்டு மதிப்பை IRAS இணையவாசல் அல்லது Myinfo via Singpass மூலம் தெரிந்துகொள்ளலாம். வீவக வீட்டின் ஆண்டு மதிப்புப் பொதுவாக $21,000-க்கு கீழ் இருக்கும், அதே நேரத்தில் சில குறைந்த மதிப்புடைய தனியார் சொத்துகளின் ஆண்டு மதிப்பு $21,000 மற்றும் $31,000 -க்கு இடைப்பட்டிருக்கும்.*

*அச்சிடும் நேரத்தில் தகவல் துல்லியமாக இருந்தது.*

# நான் எப்படி விண்ணப்பிக்கலாம்?



**go.gov.sg/jsscheme-eligibility** இணையத் தளத்திற்குச் சென்று அல்லது இங்கே வருடி உங்களின் தகுதியை Singpass பயன்படுத்திச் சோதித்துக் கொண்டு விண்ணப்பிக்கலாம். அதற்கு 10 நிமிடங்கள் ஆகும்.

விண்ணப்பிப்பதற்கும் முன்னால் பின்வரும் ஆவணம், ஆவணங்களைத் தயார் செய்துகொள்ளுங்கள்:

- முன்னாள் முதலாளியிடமிருந்து பெற்ற அதிகாரப்பூர்வ பணி நீக்கக் கடிதம் அல்லது அறிவிப்பு
- உங்களை மருத்துவக் காரணங்களுக்காகப் பணிநீக்கம் செய்திருந்தால், மருத்துவச் சான்றிதழ் அல்லது மருத்துவ நிலையத்திலிருந்து/ மருத்துவரிடமிருந்து பெற்ற அதிகாரப்பூர்வ கடிதத்தை அளித்திடுங்கள்

நீங்கள் அளித்த தகவல்களை உங்கள் முன்னாள் முதலாளியைத் தொடர்புகொண்டு சரிபார்த்திடுவோம். விண்ணப்பத்தைப் பரிசீலிக்க 10 நாள்கள்வரை ஆகக்கூடும். விண்ணப்பத்தின் முடிவு உங்களுக்கு மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும்.

# யாருடனாவது பேசவேண்டுமா?



நீங்கள் வேலை தேடுபவர் ஆதரவுத் திட்டத் தூதர்களோடு பின்வரும் இடங்களில் பேசலாம்.

- வாழ்க்கைத்தொழில் ஆலோசனைத் திட்டம் (வாழ்நாள் கற்றல் நிலையம்)
- e2i வாழ்க்கைத்தொழில் நிலையம் (தேவன் நாயர் வேலைநியமன வேலைத்தகுதி நிலையம்)
- e2i வாழ்க்கைத்தொழில் நிலையம் (ஒன் மரினா புலவார்ட்)
- ServiceSG நிலையம் நமது தெம்பனீஸ் மையம்
- ServiceSG நிலையம் உட்லண்ட்ஸ்
- சமூகச் சேவை அலுவலகம் @ தோ பாயோ

**go.gov.sg/jsscheme-locations** என்ற இணையத்தளத்திற்குச் செல்லவும் அல்லது QR குறியீட்டை வருடி ஆகக் கடைசி இடங்களின் பட்டியலைப் பார்க்கவும்.


மாறாக **6883 5885** என்ற எங்களுடைய நேரடித் தொலைப்பேசி எண்ணைத் தொடர்புகொண்டு மேல் விவரங்களைப் பெறலாம்.




*அச்சிடும் நேரத்தில் தகவல் துல்லியமாக இருந்தது.*

# என்னுடைய விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டப் பிறகு நான் என்ன செய்ய வேண்டும்?

வேலைத் தேடும் நடவடிக்கையைத் தொடங்கி திட்டத்தின் கீழ் புள்ளிகளை ஈட்டத் தொடங்குங்கள். மாதாந்திரப் புள்ளி இலக்குகளை எட்டியப் பிறகு வழங்குதொகைகள் பரிசீலிக்கப்பட்டு உங்கள் PayNow-NRIC கணக்கில் போடப்படும். வழங்குதொகை அமைப்புக் குறித்த விவரங்களுக்கு பின்வருவனவற்றைப் பார்க்கவும்.




அதிகபட்ச மாதாந்திர வழங்குதொகைகள்




உங்கள் சராசரி மாத வருமானம் குறிப்பிடப்பட்டுள்ள தொகையைவிடக் குறைவாக இருந்தால், அதற்குப் பதிலாக நீங்கள் கடந்த காலத்தில் பெற்ற சராசரி மாத வருமானத்தைப் பெறுவீர்கள். உதாரணத்திற்குப் பெறுநரின் சராசரி மாத வருமானம் $900 என்றால் அவர் $900க்கு அதிகமாக மாதாந்திர வழங்குதொகைகளைப் பெற மாட்டார்.

வேலை தேடுவோருக்கு அவர்களின் திறன்களையும் அனுபவத்தையும் நன்கு பயன்படுத்திக் கொள்ளும் வகையிலான வேலை கிடைக்கத், தகுதியான விண்ணப்பத்தாரர்கள் தற்காலிக நிதி உதவியாக 6 மாதத்திற்கு $6,000 வரை நிதி உதவி பெறலாம்.

மாதாந்திர வழங்குதொகைகளின் உச்சவரம்பு தனிநபர்கள் கடைசியாக ஈட்டிய மாத வருவாய் சராசரியின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெறுபவருக்கு வேலை கிடைத்தவுடன் மாதாந்திர வழங்குதொகைகள் நிறுத்தப்படும்.



*அச்சிடும் நேரத்தில் தகவல் துல்லியமாக இருந்தது.*

# நான் எவ்வாறு புள்ளிகளை ஈட்டுவது?

வேலை தேடுபவர்கள் அவர்களுடைய தேடும் பயணத்தில் நடவடிக்கைகள் சார்ந்த முறையில் தங்கள் பங்கைச் செய்வதன் மூலம் வழங்குதொகைகளைப் பெற்றிடலாம். (அதாவது., முதல் 3 மாதங்களுக்குக் குறைந்தபட்சம் 10 புள்ளிகள்/மாதம், மற்றும் அடுத்த 3 மாதங்களுக்குக் குறைந்தபட்சம் 5 புள்ளிகள்/மாதம்).

ஒவ்வொரு மாதமும் இந்நடவடிக்கைகளிலிருந்து நீங்கள் எத்தனை முறை புள்ளிகள் ஈட்டலாம் என்பதற்கு உச்சவரம்பு உள்ளது. 'வரம்பு இல்லை' என்று குறிப்பிடப்பட்டுள்ளவை இதில் அடங்காது.

புள்ளிகளை ஈட்ட, நீங்கள் பூர்த்திசெய்த ஒவ்வொரு நடவடிக்கைக் குறித்தும் தெரிவிப்பதற்கு, நீங்கள் ஒவ்வொரு நடவடிக்கையையும் பூர்த்திசெய்த தேதியைக் காட்டும் அல்லது ஒரு பாடத்திட்டத்தில் சேர்ந்ததைக் காட்டக்கூடிய ஆதார ஆவணங்களை வேலை தேடுபவர் ஆதரவுத் திட்டம் இணையவாசலில் பதிவேற்றம் செய்ய வேண்டும். சான்றுகளை எவ்வாறு சமர்ப்பிப்பது என்பதை இணையவாசலில் பார்த்துத் தெரிந்துகொள்ளவும்.

---

பூர்த்திசெய்த நடவடிக்கைக்கான புள்ளி (கள்)

வரம்பில்லை

இந்நடவடிக்கையிலிருந்து ஒரு மாதத்தில் நீங்கள் அதிகபட்ச முறை ஈட்டக்கூடிய புள்ளிகள்

வேலை தேடும் நிறுவனம் ஒன்றில் பதிவுசெய்தல்



1புள்ளி

1x

ஸ்கில்ஸ்ஃபியூச்சர் சிங்கப்பூர் அமைப்பு வழங்கும் திறன்கள், பயிற்சி ஆலோசனை சேவை அல்லது ஸ்கில்ஸ்ஃபியூச்சர் ஆலோசனைப் பயிலரங்கு ஒன்றில் பங்கேற்றல்



1புள்ளி

1x


MyCareersFuture வழங்கும் CareersCompass போன்ற வாழ்க்கைத்தொழில் தொடர்பான பல்வேறு உள்ளடக்கத்தைப் பார்ப்பது அல்லது பதிந்து கொள்வது




1புள்ளி

2x

சிங்கப்பூர் ஊழியர் அணி அமைப்பின் (WSG) வாழ்க்கைத்தொழில் மாற்றும் திட்டத்திற்கு அல்லது பணியிடைக்கால வாழ்க்கைத்தொழில் பாதைகள் திட்டத்திற்கு விண்ணப்பித்தல்



1புள்ளி

3x

MyCareersFuture அல்லது மற்ற வேலை இணையவாசல்களில் ஒரு வேலைக்கான விண்ணப்பத்தைச் சமர்பித்தல்




1புள்ளி

5x



*அச்சிடும் நேரத்தில் தகவல் துல்லியமாக இருந்தது.*


**MySkillsFuture பட்டியலிடப்பட்டுள்ள பயிற்சி ஒன்றில் கலந்துகொள்ளுதல்**




2 புள்ளிகள்

1x


**இணையவழி வேலை இணையவாசல் ஒன்றில் உங்கள் சுயவிவரத்தைப் புதுப்பித்தல்**



2 புள்ளிகள்

1x

**CareersFinder போட்டியின் மூலம் உங்கள் வாழ்க்கைத் தொழிலைத் திட்டமிடுங்கள்**



2 புள்ளிகள்

1x

**வாழ்க்கைத்தொழிலோடு சம்பந்தப்பட்ட பயிலரங்கில் அல்லது கருத்தரங்கில் கலந்துகொள்ளுதல்**



2 புள்ளிகள்

3x

**வேலைவாய்ப்புச் சார்ந்த தன்னார்வத் திட்டம் ஒன்றில் பங்கேற்பது**



2 புள்ளிகள்

வரம்பில்லை

**தொழில்துறை சார்ந்த ஒரு வல்லுநருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுதல்**



3 புள்ளிகள்

1x

**வாழ்க்கைத்தொழில் பயிற்சி அமர்வுகளில் அல்லது ஆலோசனை சேவைகளில் கலந்துகொள்ளுதல்**



4 புள்ளிகள்

1x

**வேலை நேர்முகத்தேர்வில் கலந்துகொள்ளுதல்**



4 புள்ளிகள்

வரம்பில்லை



*அச்சிடும் நேரத்தில் தகவல் துல்லியமாக இருந்தது.*

# திட்டம் குறித்து நான் வேறு என்ன தெரிந்துகொள்ள வேண்டும்?

## 1 “எண்ணாமல் நிகழ்கின்ற வேலையிழப்பு” எவ்வாறு வரையறுக்கப்படுகிறது?

ஒரு நபர் தனது கடைசி வேலையிலிருந்து தானாகவே வெளியேற முடிவுசெய்யவில்லையென்றால் அந்நபர் “எண்ணாமல் நிகழ்கின்ற வேலையிழப்புக்கு ஆளானவர்” என்று வரையறுக்கப்படுகிறார். அதாவது, முதலாளியுடனான வேலை ஒப்பந்தத்திலிருந்து நீக்கப்படுவதை முதலில் அவர் தொடங்கவில்லை என்று பொருள்.

ஆட்குறைப்பு, வியாபாரம் நின்றுபோவது, முதலாளியால் பணிநீக்கம் செய்யப்படுதல் (உதாரணத்திற்கு, அதே வேலையை உடல்ரீதியாகச் செய்ய முடியாமல் போவது) போன்றவை உதாரணங்களில் அடங்கும்.






*அச்சிடும் நேரத்தில் தகவல் துல்லியமாக இருந்தது.*

## 2 ஆண்டு மதிப்பு $31,000 அல்லது அதற்கும் குறைவான வீட்டில் வாழும் அளவுகோலை பூர்த்திசெய்கிறேனா என்பதை நான் எப்படிக் கண்டுபிடிப்பது?

நீங்கள் குடியிருக்கும் வீட்டின் ஆண்டு மதிப்பை IRAS இணையவாசல் அல்லது Singpass வழியாக Myinfo மூலம் தெரிந்துகொள்ளலாம்.






*அச்சிடும் நேரத்தில் தகவல் துல்லியமாக இருந்தது.*

## 3 நான் மற்றொரு அரசாங்கத் திட்டத்திடமிருந்து உதவி பெற்று வருகிறேன். (எ.கா. ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பணி நிலைமாற்றத் திட்டம்) நான் அப்போதும்கூட இத்திட்டத்திற்குத் தகுதி பெற முடியுமா?


ஆம், நீங்கள் தகுதி அடிப்படைகளைப் பூர்த்திசெய்தீர்களானால், வேறொரு அரசாங்கத் திட்டத்திலிருந்து உதவி பெற்றாலும் கூட உங்களால் இந்தத் திட்டத்திற்கும் தகுதிபெற முடியும்.

## 4 ஒருவேளை எண்ணாமல் நிகழ்கின்ற வேலையிழப்பு ஏற்பட்டிருந்தால், ஆனால் அதே சமயம் பணி ஓய்வு அல்லது மறு வேலை வயதை எட்டியிருந்தால், நான் இந்தத் திட்டத்திற்குத் தகுதி பெறுவேனா?

ஆம், நீங்கள் இத்திட்டத்திற்கான தகுதி அடிப்படைகளைப் பூர்த்திசெய்தால் நீங்கள் இதற்குத் தகுதிபெறுவீர்கள். இதற்கு வயது உச்சவரம்பு ஏதும் கிடையாது.

## 5 ஒருவேளை நான் தகுதி அடிப்படையைப் பூர்த்திசெய்யவில்லை, ஆனால் எனக்கு உதவித் தேவைப்படுகிறது என்றால் என்ன செய்வது?

வாழ்க்கைத்தொழில் ஆதரவு சேவைகளைப் பெற நீங்கள் இணையவழி சிங்கப்பூர் ஊழியர் அணி அமைப்பு (WSG) மூலம் அல்லது WSG மற்றும் e2i வாழ்க்கைத்தொழில் நிலையங்களை அணுகி பதிவு செய்யலாம். மேலும் நீங்கள் அரசாங்கம் அளிக்கும் ஆதரவுச் சேவைகளின் முழுமையான பட்டியலுக்கு go.gov.sg/jsscheme-supportgowhere என்ற இணையத்தளத்திற்குச் செல்லலாம்.






*அச்சிடும் நேரத்தில் தகவல் துல்லியமாக இருந்தது.*

# மேலும் ஆதரவுப்பெற நான் எங்குச் செல்ல வேண்டும்?

மேலும் அதிக உதவித் தேவைப்படுவோர், அரசாங்கம் அளிக்கும் ஆதரவுச் சேவைகளின் முழுமையானப் பட்டியலுக்கு **go.gov.sg/jsscheme-supportgowhere** என்ற இணையத்தளத்திற்குச் செல்லவும்.

மேலும் உங்கள் கைத்தொலைப்பேசியில் நீங்கள் **LifeSG** செயலியையும் பதிவிறக்கம் செய்து பட்டியலை நாடலாம்.




*அச்சிடும் நேரத்தில் தகவல் துல்லியமாக இருந்தது.*

# மற்ற வாழ்க்கைத்தொழில் ஆதரவு, வளங்கள்

சிங்கப்பூர் ஊழியர் அணி அமைப்பின் (WSG) வளங்களையும் சேவைகளையும் பயன்படுத்தி உங்கள் வாழ்க்கைத்தொழிலைச் சீர் செய்யுங்கள். **go.gov.sg/jsscheme-careermatching** என்ற இணையத்தளத்திற்குச் சென்று மேலும் தகவல் பெறுங்கள்.



சுயவிவரத்தையும் நேர்முகத் துவக்கத் தொகுப்பையும் பதிவிறக்கம் செய்து உங்கள் வேலை தேடும் செயல்முறையைத் தொடங்குங்கள். **go.gov.sg/jsscheme-starterpack** என்ற இணையத்தளத்தில் மேலும் படித்துத் தெரிந்துகொள்ளுங்கள்.





*அச்சிடும் நேரத்தில் தகவல் துல்லியமாக இருந்தது.*